# வணிகவரி மற்றும் பதிவுத்துறை

## மானியக் கோரிக்கை எண்.11

## முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2022-2023


**பி. மூர்த்தி**

வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்



©

தமிழ்நாடு அரசு

2022

# பொருளடக்கம்


| வரிசை எண். | பொருள் | | பக்கம் எண். |
|---|---|---|---|
| 1 | முகவுரை | | 1 |
| | 1.1 | வரலாற்று காலத்தில் பதிவு முறைமை | 2 |
| | 1.2 | பதிவுத்துறையின் தொடக்கம் | 3 |
| 2 | பதிவுத்துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்கள் | | 4 |
| | 2.1 | பதிவுச்சட்டம், 1908 | 4 |
| | 2.2 | இந்திய முத்திரைச் சட்டம், 1899 | 5 |
| | 2.3 | தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975 | 5 |
| | 2.4 | சீட்டு நிதிகள் சட்டம், 1982 | 6 |
| | 2.5 | பிறப்பு, இறப்பு மற்றும் திருமணங்கள் பதிவுச் சட்டம், 1886 | 7 |
| | 2.6 | இந்திய கூட்டு பங்காண்மைச் சட்டம், 1932 | 7 |
| | 2.7 | தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், 2009 | 8 |
| | 2.8 | பதிவுத்துறையால் நிர்வகிக்கப்படும் இதர சட்டங்கள் | 8 |
| 3. | துறையின் கட்டமைப்பு | | 9 |
| | 3.1 | பதிவுத்துறை தலைவர் | 9 |
| | 3.2 | கூடுதல் பதிவுத்துறை தலைவர்கள் | 10 |
| | 3.3 | பதிவு மண்டலங்கள் (துணை பதிவுத்துறை தலைவர் தலைமையின் கீழ்) | 11 |
| | 3.4 | மண்டல அலுவலகங்கள் (உதவி பதிவுத்துறை தலைவர் தலைமையின் கீழ்) | 15 |

| | | | |
|---|---|---|---|
| | 3.5 | பதிவு மாவட்டங்கள் | 17 |
| | 3.6 | சார்பதிவாளர் அலுவலகங்கள் | 19 |
| | | 3.6.1 சார்பதிவாளர்களின் பணிகள் | 20 |
| | 3.7 | மாவட்ட வருவாய் அலுவலர்கள் (முத்திரை)/ தனித்துணை ஆட்சியர்கள் (முத்திரை) | 21 |
| | 3.8 | தணிக்கை பிரிவு | 25 |
| | 3.9 | கட்டட கள ஆய்வு பிரிவு | 27 |
| 4. | வருவாய் பங்களிப்பு | | 29 |
| | 4.1 | ஈட்டப்பட்ட வருவாய் மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் ஒப்பீடு | 30 |
| | 4.2 | இதர இனங்கள் மூலம் ஈட்டப்பட்ட வருவாய் | 31 |
| 5. | சந்தை மதிப்பு குழு | | 32 |
| | 5.1 | சந்தை மதிப்பு சீரமைத்தல் | 35 |
| 6. | முத்திரைத் தீர்வை விலக்கு | | 37 |
| 7. | சங்கங்கள் | | 38 |
| 8. | சீட்டுகள் | | 43 |
| | 8.1 | சீட்டு நடுவர் மன்றம் | 46 |
| 9. | கூட்டு பங்காண்மை நிறுவனங்கள் | | 47 |
| 10. | திருமணப் பதிவு | | 51 |
| | 10.1 | கிறித்துவ திருமண சான்றிதழ்களின் உண்மை வடிப்புகள் | 53 |
| 11. | முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் | | 54 |

| | | | |
|---|---|---|---|
| 12. | ஆவண எழுத்தர்கள் | | 56 |
| | 12.1 | ஆவண எழுத்தர் நல நிதியம் | 58 |
| 13. | துறையில் தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி | | 60 |
| | 13.1 | எளிமை மற்றும் வெளிப்படையான பதிவு நிர்வாகத்திற்கான 'ஸ்டார்' மென்பொருள் – (Simplified and Transparent Administration of Registration –'STAR') | 61 |
| | 13.2 | ஸ்டார் 2.0–ன் வளர்ச்சி | 63 |
| | 13.3 | இணைய நெறிமுறை புகைப்படக் கருவி வசதி | 68 |
| | 13.4 | இணைய வழியாக வங்கிகளில் பணம் செலுத்திடும் முறை | 70 |
| | 13.5 | எவ்வித கட்டணமுமின்றி இணையதளத்தில் வில்லங்க சான்று பார்வையிடும் வசதி | 72 |
| | 13.6 | 1975–ஆம் ஆண்டிற்கு முந்தைய கால அட்டவணை II விவரங்களை இலக்கமயமாக்கல் | 73 |
| | 13.7 | மின்னணு பதிப்புமுறை (e–Stamping) | 74 |
| | 13.8 | வலை நிழலி (Web–Cam) மற்றும் மின்னணு ரேகை பதிவு (Bio metric device) முறை செயல்படுத்துதல் | 78 |
| | 13.9 | மின்னணு கையொப்பம் (e–sign) | 79 |
| | 13.10 | ஆதார் தரவுடன் ஆவணத்தை எழுதிக் கொடுப்பவர் மற்றும் எழுதி வாங்குபவரது விரல்ரேகை/கருவிழிப் படலம் சரிபார்த்தல் | 80 |

| | | | |
|---|---|---|---|
| | 13.11 | தன்னிச்சையான பட்டா மாறுதல் | 81 |
| | 13.12 | தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான வாரியம், சென்னை பெருநகர மாநகராட்சிக்குட்பட்ட சொத்து வரி மற்றும் சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் விதிக்கப்படும் குடிநீர் வரி ஆகியவற்றில் பெயர் மாற்றம் செய்ய தானாகவே விண்ணப்பம் அனுப்பும் வசதி | 83 |
| 14 | உள்ளாட்சி அமைப்புகளுக்கு மிகுவரி மாற்றம் செய்தல் | | 84 |
| 15 | தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 | | 85 |
| 16. | பொது மக்களின் நலனுக்காக அரசால் எடுக்கப்பட்ட புதிய முயற்சிகள் | | 85 |
| | 16.1 | குறை தீர்த்தல் | 85 |
| | 16.2 | பதிவுத் தவறுகளை ஆராய சிறப்பு புலனாய்வுக் குழு | 87 |
| | 16.3 | மோசடியான பதிவுகளை இரத்து செய்தல் | 88 |
| | 16.4 | கிறித்துவ திருமண சான்றின் உண்மை வடிப்புகள் | 90 |
| | 16.5 | சார்பதிவக செயல் எல்லைகள் மறுசீரமைத்தல் | 90 |
| | 16.6 | புதிய பதிவு மாவட்டங்கள் உருவாக்குதல் | 92 |
| 17. | முடிவுரை | | 93 |

**வணிகவரி மற்றும் பதிவுத்துறை**

**மானியக் கோரிக்கை எண். 11**

**முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு**

**கொள்கை விளக்கக்குறிப்பு 2022 – 2023**

**1. முகவுரை**

பதிவு என்பது சொத்து பரிவர்த்தனைகளையும் அதனோடு தொடர்புடைய செயல்பாடுகளையும் ஆவணப்படுத்தி, உரிய அலுவலர் மூலம் பதிவு செய்வதும் பின்னர் அவற்றைப் பதிவேடுகளாக நிரந்தரமாக பாதுகாப்பதும் ஆகும். ஆவணங்கள் பதிவு மற்றும் திருமணங்கள், சங்கங்கள், சீட்டுகள் மற்றும் கூட்டு பங்காண்மை நிறுவனங்களைப் பதிவு செய்யும் பொறுப்பு பதிவுத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## 1.1 வரலாற்று காலத்தில் பதிவு முறைமை

பண்டைய தமிழகத்தில் ஆவணங்களைப் பதிவு செய்யும் நடைமுறை பின்பற்றப்பட்டது என்பதற்கான பல வரலாற்றுக் குறிப்புகள் காணப்படுகின்றன. புகழ்பெற்ற ஆங்கிலேய சட்ட வல்லுநரும் வரலாற்று ஆசிரியருமான சர் ஹென்றி ஜேம்ஸ் சம்னர் மெய்ன் என்பவர் தென்னிந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் நிலத்தின் தனிப்பட்ட உரிமை சிறப்பாக ஆவணப்படுத்தப்பட்டு, எழுதி கொடுப்பவர், எழுதி வாங்குபவர், சாட்சிகள் ஆகியோரின் கையொப்பங்கள் பெறப்பட்டு, பதிவு செய்யப்பட்டு பின்னர் பதிவு அதிகாரிகளின் பாதுகாப்பில் 'ஆவணக்களரி'–யில் வைக்கப்பட்டதாக

தெரிவிக்கிறார். மேலும், ஆவணங்களின் பிரதிகள் தயாரிக்கப்பட்டு பின்னாளைய தேவைக்காக பாதுகாக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தன என்பதையும் அறிய முடிகிறது.

## 1.2 பதிவுத்துறையின் தொடக்கம்

சொத்துக்களின் தன்மை மற்றும் உரிமைகளின் பரப்பு குறித்து பொதுமக்களுக்கு தகவல் அளிக்கும் அடிப்படை நோக்கத்துடன் 1864 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட பதிவுத்துறையானது, கடந்த 158 ஆண்டுகளில் பல்வேறு பரிமாணங்களில் வளர்ச்சி அடைந்து பொதுமக்களின் பதிவு தொடர்பான நடவடிக்கைகளை முறைப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள பல்வேறு ஒன்றிய சட்டங்கள்

மற்றும் மாநில சட்டங்களை நிர்வகிக்கும் துறையாக விளங்கி வருகிறது.

**2. பதிவுத்துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்கள்**

பதிவுத்துறையால் நிர்வகிக்கப்படும் 13 சட்டங்களில் நான்கு சட்டங்கள் முழுமையாகவும் ஒன்பது சட்டங்கள் பகுதியாகவும் நிர்வகிக்கப்படுகின்றன. அச்சட்டங்களின் விவரங்கள் கீழ்கண்டவாறு:–

**2.1. பதிவுச் சட்டம், 1908**

பழமையான சட்டங்களில் ஒன்றான இச்சட்டம் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலிருந்தே நடைமுறையில் உள்ளது. இது ஆவணங்களின் பதிவிற்கு முன்பும் பின்பும்

கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளைப் பற்றி வரையறுக்கிறது.

## 2.2. இந்திய முத்திரைச் சட்டம், 1899

இந்த சட்டமும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலிருந்தே நடைமுறையில் உள்ளது. இச்சட்டத்தில் பத்திரங்களுக்கு உரிய முத்திரைத் தீர்வை விதிப்பது குறித்து வரையறுக்கப்பட்டுள்ளது. முறையான முத்திரைத் தீர்வை செலுத்தப்படாத பத்திரங்கள் நீதிமன்றத்தில் சாட்சியமாக அனுமதிக்கப்படமாட்டாது.

## 2.3. தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975

இச்சட்டமானது கல்வி, இலக்கியம், அறிவியல் மற்றும் பிற நோக்கங்களைக் கொண்ட

சங்கங்களைப் பதிவு செய்வதற்கும் அச்சங்கங்களின் பதிவு தொடர்பான நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கும் காலமுறை அறிக்கைகளை கோர்வை செய்வதற்கும் வழிவகை செய்கிறது.

## 2.4. சீட்டு நிதிகள் சட்டம், 1982

சீட்டு என்பது நாட்டிலுள்ள பழமையான நிதி சார்ந்த நடவடிக்கைகளில் ஒன்றாகும். சீட்டு நிறுவனங்களின் நடவடிக்கைகள் சீட்டு நிதிகள் சட்டம், 1982–ன்படி முறைப்படுத்தப்படுகின்றன. சீட்டு நிறுவனம் மற்றும் அதன் சந்தாதாரர்கள் இடையே ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு அளிக்கும் அமைப்பாக சீட்டு நடுவர் மன்றம் உள்ளது.

## 2.5. பிறப்பு, இறப்பு மற்றும் திருமணங்கள் பதிவுச் சட்டம், 1886

இச்சட்டம் பிறப்பு, இறப்பு மற்றும் திருமணங்கள் தொடர்பான ஆவணங்கள் பதிவுத்துறையால் பாதுகாக்கப்படவும் பதிவுருக்கள்/பதிவேடுகளின் உண்மை வடிப்புகள் வழங்கப்படவும் வழிவகை செய்கிறது.

## 2.6. இந்திய கூட்டு பங்காண்மைச் சட்டம், 1932

கூட்டு பங்காண்மை நிறுவனங்களைப் பதிவு செய்து, படிவங்களை கோர்வை செய்வதன் மூலம் அந்நிறுவனங்களின் நிதி, வணிகம், நிர்வாகம், பணிகள் மற்றும் தொழில் சார்ந்த நலன் இத்துறையால் பாதுகாக்கப்படுகிறது.

## 2.7. தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், 2009

மாநிலத்தில் நடைபெறும் அனைத்து திருமணங்களையும் பதிவு செய்வதை தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், 2009 கட்டாயமாக்கியுள்ளது.

## 2.8. பதிவுத்துறையால் நிர்வகிக்கப்படும் இதர சட்டங்கள்

- இந்திய கிறித்துவ திருமணச் சட்டம், 1872
- பார்சி திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம், 1932
- சிறப்பு திருமணச் சட்டம், 1954
- இந்து திருமணச் சட்டம், 1955
- வரதட்சணை தடுப்பு சட்டம், 1961
- பிறப்பு மற்றும் இறப்பு சட்டம், 1969

## 3. துறையின் கட்டமைப்பு

பதிவுச் சட்டம், 1908–ன்படி துறையின் பல அலுவலகங்கள் மற்றும் அதன் அதிகாரங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. மாநிலத்தில் 9 மண்டல அலுவலகங்கள், 54 பதிவு மாவட்டங்கள், 576 சார்பதிவாளர் அலுவலகங்கள் மற்றும் மூன்று முகாம் அலுவலகங்கள் செயல்பாட்டில் உள்ளன.

### 3.1. பதிவுத்துறை தலைவர்

பதிவுத்துறையானது பதிவுத்துறை தலைவரின் கீழ் செயல்படுகிறது. மேலும் i) இந்திய முத்திரைச் சட்டம், 1899–ன் கீழ் முதன்மை வருவாய் கட்டுப்பாட்டு அலுவலராகவும் ii) தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975 மற்றும் சீட்டு நிதிகள் சட்டம்,

1982–ன் கீழ் தலைமைப் பதிவாளராகவும் பல்வேறு சட்டங்களின் கீழ் அளிக்கப்படும் மேல்முறையீடு மற்றும் சீராய்வுகளைத் தீர்வு செய்யும் அதிகாரம் பெற்ற அலுவலராகவும் செயல்படுவதன் மூலம் பல சட்டபூர்வ பணிகளை பதிவுத்துறை தலைவர் மேற்கொள்கிறார்.

### 3.2. கூடுதல் பதிவுத்துறை தலைவர்கள்

நான்கு கூடுதல் பதிவுத்துறை தலைவர்கள் பதிவுத்துறை தலைவருக்கு உதவியாக செயல்படுகின்றனர். அவர்களது பணி விவரங்களின் வகைப்பாடு கீழ்கண்டவாறு:

1. கூடுதல் பதிவுத்துறை தலைவர் (முத்திரை மற்றும் பதிவு)

2. கூடுதல் பதிவுத்துறை தலைவர் (சீட்டுகள் மற்றும் சங்கங்கள்) / கூடுதல் சீட்டு பதிவாளர்
3. கூடுதல் பதிவுத்துறை தலைவர் (புலனாய்வு)
4. கூடுதல் பதிவுத்துறை தலைவர் (வழிகாட்டி)

### 3.3. பதிவு மண்டலங்கள் (துணை பதிவுத்துறை தலைவர் தலைமையின் கீழ்)

துணை பதிவுத்துறை தலைவரை தலைமையாகக் கொண்டு பதிவுத்துறையில் ஒன்பது மண்டலங்கள் செயல்பட்டு வருகின்றன. தங்களது அதிகார எல்லைக்குட்பட்ட மாவட்டப்பதிவாளர் அலுவலகங்களின் செயல்பாட்டினை துணை பதிவுத்துறை தலைவர்கள் கண்காணிக்கின்றனர்.

மண்டலங்கள் மற்றும் அவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள மாவட்டப்பதிவாளர் அலுவலகங்களின் விவரங்கள் கீழ்வருமாறு:

1. **சென்னை மண்டலம்**
    - வடசென்னை
    - தென்சென்னை
    - மத்திய சென்னை
    - செங்கல்பட்டு
    - காஞ்சிபுரம்
    - திருவள்ளூர்
2. **வேலூர் மண்டலம்**
    - வேலூர்
    - இராணிப்பேட்டை
    - திருப்பத்தூர்
    - செய்யார்
    - திருவண்ணாமலை

3. **கடலூர் மண்டலம்**

- கடலூர்
- சிதம்பரம்
- விருத்தாச்சலம்
- விழுப்புரம்
- திண்டிவனம்
- கள்ளக்குறிச்சி

4. **சேலம் மண்டலம்**

- சேலம் (கிழக்கு)
- சேலம் (மேற்கு)
- நாமக்கல்
- தர்மபுரி
- கிருஷ்ணகிரி

5. **திருச்சிராப்பள்ளி மண்டலம்**

- திருச்சிராப்பள்ளி
- கரூர்
- பெரம்பலூர்

- அரியலூர்
- புதுக்கோட்டை

**6. தஞ்சாவூர் மண்டலம்**

- தஞ்சாவூர்
- நாகப்பட்டினம்
- மயிலாடுதுறை
- பட்டுக்கோட்டை
- கும்பகோணம்
- திருவாரூர்

**7. கோயம்புத்தூர் மண்டலம்**

- கோயம்புத்தூர்
- உதகமண்டலம்
- திருப்பூர்
- ஈரோடு
- கோபிசெட்டிப்பாளையம்

**8. மதுரை மண்டலம்**

- மதுரை (வடக்கு)
- மதுரை (தெற்கு)

- திண்டுக்கல்
- பழனி
- பெரியகுளம்
- விருதுநகர்
- சிவகங்கை
- காரைக்குடி
- இராமநாதபுரம்

9. திருநெல்வேலி மண்டலம்

- திருநெல்வேலி
- பாளையங்கோட்டை
- சேரன்மகாதேவி
- தென்காசி
- தூத்துக்குடி
- கன்னியாகுமரி
- மார்த்தாண்டம்

### 3.4. மண்டல அலுவலகங்கள் (உதவி பதிவுத்துறை தலைவர் தலைமையின் கீழ்)

துணை பதிவுத்துறை தலைவரின்

தலைமையின் கீழ் இயங்கி வரும் 9 மண்டல

அலுவலகங்களுடன் கூடுதலாக 4 சரக அலுவலகங்கள் உதவி பதிவுத்துறை தலைவர் தலைமையின் கீழ் சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் தொடர்புடைய துணை பதிவுத்துறை தலைவருக்கு உதவும் வகையில் செயல்படுகின்றன.

மாவட்டப்பதிவாளர் (தணிக்கை)–ஆல் பிறப்பிக்கப்படும் இறுதியாணைகளுக்கு எதிராக சார்பதிவாளர்களால் செய்யப்படும் மேல்முறையீடுகளை விசாரிக்கும் உரிய மேல்முறையீட்டு அலுவலராக சரக உதவி பதிவுத்துறை தலைவர் உள்ளார். இவர் சோதனை தணிக்கை, கட்டட கள மதிப்பீடு மீதான திடீர்

தணிக்கை மற்றும் தனது அதிகார எல்லைக்கு உட்பட்ட சார்பதிவாளர் அலுவலக செயல்பாடுகளை ஆய்வு செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறார்.

### 3.5 பதிவு மாவட்டங்கள்

மாவட்டப்பதிவாளர் (நிர்வாகம்) தலைமையின் கீழ் பதிவு மாவட்டங்கள் செயல்படுகின்றன. தமிழ்நாட்டில் 54 பதிவு மாவட்டங்கள் உள்ளன. அதில் மாநகராட்சியில் அமைந்துள்ள 16 மாவட்டப்பதிவாளர் அலுவலகங்கள் உதவி பதிவுத்துறை தலைவர் நிலையில் உள்ள அலுவலர்களால் நிர்வகிக்கப்படுகின்றன.

அ) மாவட்டப்பதிவாளர் தனது அதிகார எல்லைக்குள் அமையப் பெற்ற சார்பதிவகங்களை கண்காணிக்கிறார்.

ஆ) சார்பதிவாளர்களால் ஆவணப் பதிவு மறுப்பு செய்யப்பட்ட ஆணைகளின் மீது மேல்முறையீட்டு அலுவலராக உள்ளார்.

இ) ஆவணங்கள் உரிய முத்திரைத் தீர்வையை தாங்கியுள்ளதா என்பது குறித்து தீர்வு செய்கிறார்.

ஈ) இவர் (i) தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம், 1975–ன் கீழ் தொடர்புடைய பதிவு மாவட்டத்தின் சங்கங்களின் பதிவாளராகவும் (ii) இந்திய கூட்டு பங்காண்மைச் சட்டம், 1932–ன் படி கூட்டு பங்காண்மை நிறுவனங்களின் பதிவாளராகவும் (iii) சீட்டு நிதிகள் சட்டம், 1982–ன் கீழ் துணை சீட்டு பதிவாளராகவும் உள்ளார்.

உ) முத்திரையிடப்பட்ட உறையில் தாக்கல் செய்யப்படும் உயில்களின் பாதுகாவலராகவும் கட்டாய ஆவணப்பதிவு மற்றும் போலி ஆவணப்பதிவு குறித்த விசாரணை மேற்கொள்ளும் அலுவலராகவும் உள்ளார்.

### 3.6. சார்பதிவாளர் அலுவலகங்கள்

மாநிலம் முழுவதும் 576 சார்பதிவாளர் அலுவலகங்கள் (உப பதிவு மாவட்டங்கள்) மற்றும் 3 முகாம் சார்பதிவாளர் அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. மேட்டூர் சார்பதிவாளர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள குளத்தூர், சேந்தமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள கொல்லிமலை மற்றும் கொம்மடிக்கோட்டை

சார்பதிவாளர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள படுக்கப்பத்து ஆகிய மூன்று முகாம் அலுவலகங்களில் செவ்வாய் மற்றும் வியாழன் ஆகிய கிழமைகளில் மட்டும் ஆவணப் பதிவுகள் நடைபெறுகின்றன.

### 3.6.1 சார்பதிவாளர்களின் பணிகள்

சார்பதிவாளர்கள் (i) சொத்து பரிவர்த்தனை தொடர்பான ஆவணப் பதிவுகள் (ii) இந்து திருமணச் சட்டம், 1955 மற்றும் தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், 2009 ஆகிய திருமணச் சட்டங்களின் கீழ் திருமணங்களைப் பதிவு செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்கின்றனர். மேலும் வில்லங்கச் சான்றுகள் மற்றும் ஆவணத்தின் சான்றிட்ட

நகல்கள் ஆகியவையும் சார்பதிவாளரால் வழங்கப்படுகின்றன. சிறப்பு திருமணச் சட்டம், 1954–ன் கீழ் திருமணத்தை நடத்தி வைப்பவராகவும், பதிவுச் சட்டம், 1908 பிரிவு 89–ன் கீழ் அனுப்பப்படும் பற்றுகை ஆணைகள் மற்றும் சான்றுகளை சார்பதிவாளர் கோர்வை செய்பவராகவும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவேடுகளின் பாதுகாவலராகவும் உள்ளார்.

## 3.7 மாவட்ட வருவாய் அலுவலர்கள் (முத்திரை) / தனித்துணை ஆட்சியர்கள் (முத்திரை)

உரிமை மாற்றம், பரிவர்த்தனை, தானம், பினாமி விடுதலை, ஏற்பாடு ஆகிய ஆவணங்களில் குறிப்பிடப்படும் அசையா சொத்தின் மதிப்பானது நடைமுறையிலுள்ள

சந்தை மதிப்பிற்குக் குறைவாக உள்ளதாக கருதப்படும் நேர்வுகளில் பதிவு அலுவலர் அவ்வாவணத்தை மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை)/தனித்துணை ஆட்சியர் (முத்திரை)–க்கு இந்திய முத்திரைச் சட்டம், 1899 பிரிவு 47A(1)–ன் கீழ் சந்தை மதிப்பினை நிர்ணயிக்கும் பொருட்டு பரிந்துரைக்கிறார். அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு முத்திரை (ஆவணங்களின் குறைவு மதிப்பு தடுப்பு) விதிகள், 1968–ல் தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றி சொத்தின் சரியான சந்தை மதிப்பினை மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித்துணை ஆட்சியர் (முத்திரை) நிர்ணயிப்பார். இவ்வாறு நிர்ணயிக்கப்படும்

மதிப்பிற்கு குறைவு முத்திரைத் தீர்வை ஏதுமிருப்பின் அதனை வசூலித்த பின் அவ்வாவணத்திற்குரிய குறைவு பதிவு கட்டணம் வசூலிக்க அவ்வாவணத்தினை உரிய சார்பதிவாளர் அலுவலகத்திற்கு மீள அனுப்புவார்.

மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) அல்லது தனித்துணை ஆட்சியர் (முத்திரை)–ஆல் நிர்ணயிக்கப்படும் மதிப்பு ஆவணதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்படாத நேர்வுகளில் அவர்கள் இந்திய முத்திரைச் சட்டம், 1899 பிரிவு 47A(5)–ன் கீழ் பதிவுத்துறை தலைவருக்கு மேல்முறையீடு செய்யலாம்.

மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) அல்லது தனித்துணை ஆட்சியர்

(முத்திரை)–ஆல் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பு உண்மையான சந்தை மதிப்பினைப் பிரதிபலிக்காத நேர்வுகளில் இந்திய முத்திரைச் சட்டம், 1899 பிரிவு 47A(6)–ன் கீழ் பதிவுத்துறை தலைவர் / முதன்மை வருவாய் கட்டுப்பாட்டு அலுவலர் தன்னிச்சையான சீராய்வினை மேற்கொள்ளலாம். மேலும் 47A(5) மற்றும் 47A(6) ஆகியவற்றின் கீழான ஆணைகளின் மீது இந்திய முத்திரைச் சட்டம், 1899 பிரிவு 47A(10)–ன் கீழ் உயர்நீதிமன்றத்தில் மட்டுமே மேல்முறையீடு செய்ய இயலும்.

மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) அல்லது தனித்துணை ஆட்சியர் (முத்திரை)–ஆல் இறுதியாணை பிறப்பிக்கப்படும்

நாளிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் குறைவு முத்திரைத் தீர்வையை ஆவணதாரர்கள் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறும் நிகழ்விலோ அல்லது மேல்முறையீடு செய்யத் தவறும் நிகழ்விலோ மொத்த காலதாமதத்திற்கு மாதம் ஒரு சதவிகித வட்டியுடன் சேர்த்து குறைவு முத்திரைத் தீர்வையை செலுத்த வேண்டும். இல்லையெனில், வருவாய் வசூல் சட்டத்தின் கீழ் குறைவு முத்திரைத் தீர்வையை வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 3.8 தணிக்கைப் பிரிவு

பதிவு செய்யப்படும் ஆவணங்களுக்கு அவற்றின் தன்மைக்கேற்ப முத்திரைத் தீர்வை மற்றும் பதிவு கட்டணம் விதிக்கப்படுகின்றன.

பதிவு அலுவலர்களால் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவு கட்டணம் வசூலிக்கப்படுவதில் வருவாய் இழப்பு ஏற்படுவதைக் கண்காணிக்கும் பொருட்டு பதிவுத்துறையில் தனியே தணிக்கை அலகு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மாவட்டப்பதிவாளர் (தணிக்கை) தலைமையில் 49 தணிக்கை அலகுகள் உள்ளன.

பதிவு செய்யப்படும் அனைத்து ஆவணங்களையும் தணிக்கை மாவட்டப்பதிவாளர்கள் கூர்ந்து ஆய்வு / சரிபார்ப்பு மேற்கொள்கின்றனர். வருவாய் இழப்பு கண்டுபிடிக்கப்படும் நேர்வுகளில் முத்திரை மற்றும் பதிவு சட்டம் ஆகியவற்றில் நிர்ணயிக்கப்பட்டுள்ளதன்படி சட்டபூர்வ

நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. தணிக்கை இழப்பு விவரங்கள் குறித்து அட்டவணையில் உரிய குறிப்பு சேர்க்கப்படுவதால் அரசுக்கு சேர வேண்டிய குறைவுத் தொகையை செலுத்தாமல் அச்சொத்துகள் தொடர்பான அடுத்த பரிவர்த்தனைகள் செய்வது தடுக்கப்படுகிறது.

### 3.9 கட்டட கள ஆய்வு பிரிவு

ஆவணத்தில் பதியப்படும் சொத்து என்பது அடிமனை மற்றும் கட்டடம் என இரு இனங்களாக வகைப்படுத்தப்படுகிறது. பதிவுக்கு தாக்கல் செய்யப்படும் ஆவணத்தில் 1–A இணைப்பில் தெரிவிக்கப்படும் விவரமானது கட்டடத்தின் பரப்பு மற்றும் அதில் அமைந்துள்ள இதர வசதிகள் குறித்ததாகும். அடிமனை மற்றும்

கட்டடத்தின் மதிப்பிற்கு தக்கவாறு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவு கட்டணம் வசூலிக்கப்படும்.

கட்டடத்தின் உண்மை மதிப்பினை தீர்மானிக்க சார்பதிவாளர்கள் ரூ.50.00 இலட்சத்திற்கு கீழான மதிப்புள்ள கட்டடங்களை கள ஆய்வு செய்கின்றனர். ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள மதிப்பானது குறைவாக இருக்கும் நேர்வில் வித்தியாச மதிப்பிற்கு குறைவு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவு கட்டணம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும். ரூ.50.00 இலட்சம் மற்றும் அதற்கு மேலான மதிப்புள்ள கட்டடங்களையும், வணிக வளாகங்கள், பல அடுக்கு கட்டடங்கள், தொழிற்சாலைகள் போன்ற சிறப்பு தன்மை வாய்ந்த

கட்டடங்களையும் அவற்றின் மதிப்பை நிர்ணயம் செய்வதற்காக இரண்டு உதவி செயற்பொறியாளர்கள் பொதுப்பணித்துறையிலிருந்து பகராண்மைப் பணியில் பதிவுத்துறையில் பணியாற்றி வருகின்றனர்.

## 4. வருவாய் பங்களிப்பு

அரசு கருவூலத்திற்கு அதிக வருவாய் பங்களிப்பு செய்யும் துறைகளில் பதிவுத்துறையும் ஒன்றாக உள்ளது. 2021-2022 நிதியாண்டில் இத்துறையின் மூலம் ஈட்டப்பட்ட மொத்த வருவாய் ரூ.13,913.65 கோடி ஆகும். இது பதிவுத்துறையில் இதுவரை ஈட்டப்படாத மிக அதிக அளவிலான வருவாயாகும். மேலும்

இத்தொகையானது முந்தைய 2020–21 நிதியாண்டில் ஈட்டப்பட்ட வருவாயை விட ரூ.3,270.57 கோடி அதிகமாகும். 2020–21 நிதியாண்டில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் 26,95,650 ஆக உள்ள நிலையில், 2021–22 ஆம் நிதியாண்டில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை 11.22% உயர்ந்து 29,98,048 ஆக பதிவானது.

**4.1 ஈட்டப்பட்ட வருவாய் மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் ஒப்பீடு**

| ஆண்டு | பதிவான ஆவணங்கள் | வளர்ச்சி சதவிகிதம் | வருவாய் (ரூ. கோடியில்) | வளர்ச்சி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 2009-10 | 27,31,026 | -3.59% | 3,818.25 | -6.86% |
| 2010-11 | 32,80,503 | 20.12% | 5,020.50 | 31.49% |
| 2011-12 | 35,18,435 | 7.25% | 6,619.98 | 31.86% |

| | | | | |
|---|---|---|---|---|
| 2012-13 | 26,90,351 | -23.54% | 7,455.41 | 12.62% |
| 2013-14 | 26,53,291 | -1.38% | 8,055.74 | 8.05% |
| 2014-15 | 25,73,931 | -2.99% | 8,279.64 | 2.78% |
| 2015-16 | 25,28,561 | -1.76% | 8,562.38 | 3.41% |
| 2016-17 | 20,27,916 | -19.80% | 7,007.74 | -18.16% |
| 2017-18 | 22,10,595 | 9.01% | 9,121.53 | 30.16% |
| 2018-19 | 25,73,478 | 16.42% | 11,071.02 | 21.37% |
| 2019-20 | 25,87,816 | 0.56% | 11,028.23 | -0.39% |
| 2020-21 | 26,95,650 | 4.17% | 10,643.08 | -3.49% |
| 2021-22 | 29,98,048 | 11.22% | 13,913.65 | 30.73% |

### 4.2 இதர இனங்கள் மூலம் ஈட்டப்பட்ட வருவாய்

திருமணங்கள், சீட்டுகள், சங்கங்கள் பதிவு மற்றும் இதர இனங்களின் கீழும் பதிவுத்துறையால் வருவாய் ஈட்டப்படுகிறது. 2021–2022 நிதியாண்டில் பல்வேறு

தலைப்புகளின் கீழ் ஈட்டப்பட்ட வருவாய் விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | வருவாய் இனம் | வருவாய் (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1. | திருமண பதிவு | 3.80 |
| 2. | சங்கங்கள் பதிவு | 9.98 |
| 3. | சீட்டு பதிவு | 14.46 |
| 4. | இதர கட்டணங்கள் (பிறப்பு மற்றும் இறப்பு சான்றுகள், குறுந்தகடுகள் உள்பட) | 18.54 |
| 5. | பங்குச் சந்தை ஆவணங்கள் (Marketable Securities) மற்றும் காப்பீட்டுத் திட்ட ஆவணங்கள் (Insurance Policies) | 366.60 |
| | **கூடுதல்** | **413.38** |

## 5. சந்தை மதிப்புக் குழு

சொத்தின் சந்தை மதிப்பிற்கு குறிப்பிட்ட சதவிகித அளவிற்கு முத்திரைத் தீர்வை

விதிக்கப்படுகிறது. சந்தை மதிப்பு என்பது நிலையற்றதாகும். கால சூழலுக்கேற்ப இம்மதிப்பு அதிகரிக்கலாம் அல்லது குறையலாம். சொத்தின் நியாயமான சந்தை மதிப்பினைக் கணக்கீடு செய்யும் பொருட்டு பதிவுத்துறை தலைவர் தலைமையின் கீழ் மாநில அளவிலான மதிப்பீட்டுக் குழுவும் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களின் தலைமையின் கீழ் மாவட்ட அளவிலான மதிப்பீட்டுக் குழுக்களும் மாநிலத்தில் செயல்படுகின்றன. மைய மதிப்பீட்டுக் குழுவின் (மாநில அளவிலான குழு) வழிகாட்டுதலின்படி துணை மதிப்பீட்டுக் குழுவால் (மாவட்ட அளவிலான குழு) சந்தை மதிப்பு வழிகாட்டி தயாரிக்கப்படுகிறது. துணை

மதிப்பீட்டுக் குழு உரிய விசாரணை அடிப்படையில் மதிப்பினை உயர்த்தலாம். மதிப்பு குறைக்கப்படும் நேர்வில் மைய மதிப்பீட்டுக் குழுவின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

மாநிலம் முழுவதும் துணை மதிப்பீட்டுக் குழுக்களால் தயாரிக்கப்பட்ட சந்தை மதிப்பு வழிகாட்டியானது 01.04.2012 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. சந்தை வழிகாட்டி மதிப்பானது 09.06.2017 முதல் 33% குறைக்கப்பட்டு கடைப்பிடிக்கப்படுகிறது.

சந்தை வழிகாட்டி மதிப்புகள் ஊரக பகுதிகளைப் பொறுத்து புல எண்களின் அடிப்படையிலும் நகர பகுதிகளைப் பொறுத்து தெருக்களின் அடிப்படையிலும்

தயாரிக்கப்படுகின்றன. சந்தை வழிகாட்டி மதிப்பு விவரங்கள் https://tnreginet.gov.in என்ற வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

### 5.1 சந்தை மதிப்பு சீரமைத்தல்

வழிகாட்டி சந்தை மதிப்புகளில் காணப்படும் முரண்பாடுகளைக் களைந்து கள நிலவரங்களுக்கேற்ப சந்தை வழிகாட்டி மதிப்புகளை மாற்றியமைக்க 'சந்தை வழிகாட்டி மதிப்பு சீரமைப்புக் குழு' ஒன்றினை அமைக்க அரசால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இக்குழு இரு அடுக்குகளாக செயல்படும். முதலாம் அடுக்கில் உள்ள உயர்மட்டக் குழு பொதுமக்களிடம் கருத்து கேட்பு மற்றும் கள ஆய்வு மேற்கொண்டும் மக்கள் பிரதிநிதிகள்

மற்றும் தொடர்புடைய துறைகளான வருவாய், உள்ளாட்சி, நகரமைப்பு மற்றும் அரசு சாரா அமைப்புகளுடன் கலந்தாய்வு நடத்தியும் உண்மையான சந்தை மதிப்பை பிரதிபலிக்கும் வகையிலான வழிகாட்டி மதிப்பினை காலமுறையில் பரிந்துரை செய்யும். வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையிலான வழிகாட்டும் குழு இந்த உயர்மட்டக் குழுவை வழிநடத்தும். சந்தை வழிகாட்டி மதிப்பு சீரமைப்புக் குழுவால் பரிந்துரைக்கப்படும் வழிகாட்டி மதிப்புகள் தொடர்புடைய துணை மதிப்பீட்டுக் குழுக்கள் மற்றும் மைய மதிப்பீட்டுக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்டு, மாநிலம்

முழுமைக்கும் சீரமைக்கப்பட்ட புதிய வழிகாட்டி மதிப்புகள் நடைமுறைப்படுத்தப்படும். பொதுமக்கள் உண்மையான சந்தை மதிப்பினை ஆவணத்தில் கடைப்பிடிக்கவும் அரசுக்கு வர வேண்டிய சரியான வருவாயை பதிவுத்துறை ஈட்டித்தரவும் இது உதவுவதாக இருக்கும்.

### 6. முத்திரைத் தீர்வை விலக்கு

தமிழ்நாட்டில் தொழில் நிறுவனங்கள் நிறுவுவதை ஊக்குவிக்கும் விதமாக பல்வேறு கொள்கைகளின் கீழ் மாநில அரசு விற்பனை மற்றும் குத்தகை ஆவணங்களின் மீதான முத்திரைத் தீர்வைக்கு விலக்களிக்கிறது. இச்சலுகை வழங்கப்படும் தொழிற்கொள்கைகள் பின்வருமாறு:

1. விண்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில் கொள்கை, 2019
2. தமிழ்நாடு மின் வாகன கொள்கை, 2019 (31.12.2022 வரை விலக்கு)
3. தமிழ்நாடு மின்னணுவியல் வன்பொருள் உற்பத்தி கொள்கை, 2020
4. தமிழ்நாடு தொழில் கொள்கை, 2021.

**7. சங்கங்கள்**

கல்வி, இலக்கியம், அறிவியல் மற்றும் பிற பிரிவுகள் தொடர்புடைய அமைப்புகளை சங்கங்களாகப் பதிவு செய்ய தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975 வழிவகுக்கிறது. பயனுள்ள நோக்கங்கள் மற்றும் ஒரே குறிக்கோள்களைக் கொண்டுள்ள, 7 நபர்களுக்குக் குறையாத உறுப்பினர்கள் இணைந்து இச்சட்டத்தின் கீழ் சம்பந்தப்பட்ட மாவட்டப்பதிவாளர்களிடம் சங்கமாக

பதிவு செய்து கொள்ளலாம். இச்சங்கத்தைப் பதிவு செய்யும் மாவட்டப்பதிவாளர் மின்னணு கையொப்பமிட்ட (Digitally signed) பதிவுச் சான்றிதழை வழங்குவார். சம்பந்தப்பட்ட சங்கத்தினர் பயனர் உள்நுழைவு (User login) மூலம் மின்னணு கையொப்பமிடப்பட்ட பதிவுச் சான்றிதழை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

சங்கங்களின் பதிவின்போது கோர்வை செய்யப்படும் சங்கத்தின் அமைப்பு குறிப்பு மற்றும் துணை விதிகளில் குறைந்தபட்சம் ஏழு உறுப்பினர்கள் கையெழுத்திட வேண்டும். ஒவ்வொரு சங்கமும் அதனை நிர்வகிக்க குறைந்தபட்சம் 3 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு செயற்குழுவினைப் பெற்றிருக்க வேண்டும்.

மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை செயற்குழுவிற்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும். சங்க நிர்வாகத்தில் முறைகேடோ அல்லது விதிமீறலோ கண்டறியப்பட்டால், அச்சங்கங்களின் விவகாரங்களை நிர்வகிக்க ஒரு சிறப்பு அலுவலரை அரசு நியமிக்க தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்கள் ஒரு நிதியாண்டில் குறைந்தது ஒரு முறையாவது பொதுக்குழு கூட்டம் நடத்தி தணிக்கை செய்யப்பட்ட வரவு செலவு கணக்குகளை சங்க பொதுக்குழு கூட்டத்தில் ஒப்புதல் பெற்று

மாவட்டப்பதிவாளரிடம் கோர்வை செய்ய வேண்டும். ஒரு பதிவு பெற்ற சங்கமானது தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு காலமுறை அறிக்கைகளை கோர்வை செய்யத் தவறினால் அச்சங்கத்தின் பெயர் சங்கங்களின் பதிவாளரால் பராமரிக்கப்படும் பதிவேட்டிலிருந்து நீக்கப்படலாம்.

ஆவணங்களைக் கோர்வை செய்வதில் ஏற்படும் காலதாமதம் 10 ஆண்டுகள் வரை இருப்பின் மாவட்டப்பதிவாளராலும் 20 ஆண்டுகள் வரை இருப்பின் பதிவுத்துறை தலைவராலும் 20 ஆண்டுகளுக்கு மேல் இருப்பின் அரசாலும் தாமதத்தைப் பொறுத்தருளி ஆணையிடப்படுகிறது.

31.03.2022 அன்றுள்ளபடி மாநிலம் முழுவதிலும் 2,16,823 பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் உள்ளன. இவற்றின் மூலம் 2021–2022 ஆம் ஆண்டில் ரூ.9.98 கோடி அரசுக்கு வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது.

**31.03.2022 அன்றுள்ளவாறு மாநிலத்தில் பதிவு பெற்ற சங்கங்களின் விவரம்**

| வ.எண். | மண்டலம் | பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சென்னை | 52,557 |
| 2. | வேலூர் | 22,369 |
| 3. | சேலம் | 25,116 |
| 4. | கோயம்புத்தூர் | 16,890 |
| 5. | தஞ்சாவூர் | 12,717 |
| 6. | திருச்சி | 17,885 |
| 7. | மதுரை | 44,153 |

| | | |
|---|---|---|
| 8. | திருநெல்வேலி | 15,113 |
| 9. | கடலூர் | 10,023 |
| | **கூடுதல்** | **2,16,823** |

**8. சீட்டுகள்**

சீட்டு நிறுவனங்களில் சேரும் சந்தாதாரர்களால் செலுத்தப்படும் பணத்திற்கு உரிய பாதுகாப்பு வழங்கும் நோக்கத்தில் சீட்டு நிதிகள் சட்டம், 1982 மற்றும் தமிழ்நாடு சீட்டு விதிகள், 1984 ஆகியவை இயற்றப்பட்டுள்ளன. மாநிலத்தில் உள்ள பதிவு பெற்ற சீட்டுகளின் செயல்பாடு இச்சட்டத்தின் கீழ் கண்காணிக்கப்படுகிறது. சீட்டு நிதிச் சட்டத்தின் கீழ் பதிவுத்துறை தலைவர் பதிவாளராகவும் கூடுதல் பதிவுத்துறை தலைவர் கூடுதல்

பதிவாளராகவும் துணை பதிவுத்துறை தலைவர்கள் இணை சீட்டுப் பதிவாளர்களாகவும் மாவட்டப்பதிவாளர்கள் துணை சீட்டுப் பதிவாளர்களாகவும் மற்றும் சார்பதிவாளர்கள் (சீட்டு மற்றும் சங்கம்) உதவி சீட்டுப் பதிவாளர்களாகவும் செயல்படுகிறார்கள். புதிய சீட்டு துவங்குவதற்கான முன் ஒப்பளிப்பாணை வழங்குவதற்காக சீட்டு நிறுவனங்களிடமிருந்து பிணைய தொகை பெறப்படுகிறது.

31.03.2022 அன்றுள்ளபடி மாநிலம் முழுவதிலும் 2,621 பதிவு செய்யப்பட்ட சீட்டு நிறுவனங்கள் உள்ளன. இந்நிறுவனங்களின் மூலம் இச்சட்டத்தின் கீழ் 2021-2022 ஆம்

நிதியாண்டில் ரூ.14.46 கோடி வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது.

### 31.03.2022 அன்றுள்ளவாறு மாநிலத்தில் பதிவு பெற்ற சீட்டு நிறுவனங்களின் விவரம்

| வ.எண். | மண்டலம் | சீட்டு நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சென்னை | 324 |
| 2. | வேலூர் | 100 |
| 3. | சேலம் | 145 |
| 4. | கோயம்புத்தூர் | 543 |
| 5. | தஞ்சாவூர் | 126 |
| 6. | திருச்சி | 296 |
| 7. | மதுரை | 235 |
| 8. | திருநெல்வேலி | 736 |
| 9. | கடலூர் | 116 |
| | **கூடுதல்** | **2,621** |

## 8.1. சீட்டு நடுவர் மன்றம்

சீட்டுக்கள் நடத்தப்படுவதில் உருவாகும் சச்சரவுகளைத் தீர்க்க துணை சீட்டுப் பதிவாளர்கள் தலைமையில் சீட்டு நடுவர் மன்றங்கள் செயல்படுகின்றன. மத்திய சென்னை, வடசென்னை மற்றும் தென்சென்னை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் சீட்டு நடுவர்கள் உள்ளனர். பிற பகுதிகளில் சீட்டு நடுவராக மாவட்டப்பதிவாளர் (நிர்வாகம்) செயல்படுகிறார். இச்சீட்டு நடுவர்கள் சீட்டுகள் மற்றும் சீட்டுக் குழுக்களின் நடைமுறைகள் தொடர்பாக எழும் வழக்குகளை விசாரித்து உரிய தீர்ப்பாணைகள் வழங்குகின்றனர். சீட்டு நடுவர்களின்

தீர்ப்பாணைகளுக்கு எதிராக அரசிடம் மேல்முறையீடு செய்யலாம். இந்த சட்டத்தின் கீழ் எழும் தகராறுகள் தொடர்பாக எந்தவொரு வழக்குகளையும் விசாரிக்க உரிமையியல் நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை.

### 9. கூட்டு பங்காண்மை நிறுவனங்கள்

அனைத்து நிர்வாக மாவட்டப்பதிவாளர்களும் இந்திய கூட்டு பங்காண்மைச் சட்டம், 1932–ன் கீழ் 'கூட்டு பங்காண்மை நிறுவனங்களின் பதிவாளர்களாக' நியமிக்கப்பட்டுள்ளனர். புதிய கூட்டு பங்காண்மை நிறுவன பதிவுக்கான விண்ணப்பத்தை துறையின் இணையதளம் வழியாகவே சமர்ப்பிக்கலாம். கூட்டு பங்காண்மை

நிறுவனங்களுக்கு இணைய வழியாக பயனர் உள்நுழைவு முகவரி (Login ID) கொடுக்கப்படுகிறது. மாவட்டப்பதிவாளரால் கூட்டு பங்காண்மை நிறுவனம் பதிவு செய்யப்பட்டு அவரால் மின்னணு கையொப்பமிடப்பட்ட (digitally signed) பதிவுச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் பயனர் உள்நுழைவைப் (user login) பயன்படுத்தி மின்னணு கையொப்பமிட்ட பதிவுச் சான்றிதழை பதிவிறக்கம் செய்யலாம்.

பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் அமைப்பில் ஏற்படுத்தப்படும் எந்தவொரு மாற்றமும் கூட்டு பங்காண்மை நிறுவன பதிவாளரிடம் தெரிவிக்கப்பட வேண்டும்.

இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் ஒவ்வொரு கூட்டு பங்காண்மை நிறுவனமும் அந்நிதியாண்டில் தொடர்ந்து செயல்பட்டு வந்ததை தெரிவிக்கும் வகையில் அந்நிறுவனம் ஒவ்வொரு நிதியாண்டு முடிவடைந்த மூன்று மாதங்களுக்குள் ஓர் உறுதிமொழியை தவறாமல் கோர்வை செய்திட வேண்டும். இந்நிறுவனங்களின் பதிவு மற்றும் வருடாந்திர உறுதிமொழி அறிவிக்கை, நிறுவனத்தின் முகவரி மாற்றம், நிறுவனத்தின் அமைப்பு மாற்றம், கூட்டாளர்களின் பெயர் மற்றும் முகவரி திருத்தம் போன்றவற்றை கோர்வை செய்ய கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன.

நம் மாநிலத்தில் 31.03.2022 அன்றுள்ளவாறு 6,51,968 பதிவு செய்யப்பட்ட கூட்டு பங்காண்மை நிறுவனங்கள் உள்ளன. 2021–2022 ஆம் ஆண்டில் ரூ.1.19 கோடி வருவாயாக பதிவு செய்யப்பட்ட கூட்டு பங்காண்மை நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கப்பட்டுள்ளது.

**31.03.2022 அன்றுள்ளவாறு மாநிலத்தில் பதிவு பெற்ற கூட்டு பங்காண்மை நிறுவனங்களின் விவரம்**

| வ.எண். | மண்டலம் | கூட்டு பங்காண்மை நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சென்னை | 2,62,492 |
| 2. | வேலூர் | 26,052 |
| 3. | சேலம் | 82,721 |

| | | |
|---|---|---|
| 4. | கோயம்புத்தூர் | 1,30,090 |
| 5. | தஞ்சாவூர் | 5,126 |
| 6. | திருச்சி | 57,332 |
| 7. | மதுரை | 53,971 |
| 8. | திருநெல்வேலி | 21,300 |
| 9. | கடலூர் | 12,884 |
| | **கூடுதல்** | **6,51,968** |

## 10. திருமண பதிவு

திருமணங்களின் பதிவு (i) இந்து திருமண சட்டம், 1955 (ii) சிறப்பு திருமண சட்டம், 1954 (iii) தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், 2009 ஆகியவற்றின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது. மாநிலத்தில் நடைபெறும் அனைத்து திருமணங்களும் தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், 2009–ன் படி மணமகள் மற்றும்

மணமகன் எந்த மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் கட்டாயமாக பதிவு செய்யப்பட வேண்டும்.

மேற்காணும் திருமண சட்டங்களின்படி 2021–22–ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட திருமணங்களின் விவரம்:–

| வ. எண் | திருமணச் சட்டம் | பதிவு செய்யப்பட்ட திருமணங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், 2009 | 96,911 |
| 2. | இந்து திருமண சட்டம், 1955 | 51,261 |
| 3. | சிறப்பு திருமண சட்டம், 1954 | 8,863 |

## 10.1 கிறித்துவ திருமண சான்றிதழ்களின் உண்மை வடிப்புகள்

இந்திய கிறித்துவ திருமண சட்டம், 1872–இன் கீழ், மத குருமார்கள் அல்லது இந்திய கிறித்துவர்களுக்கு திருமணம் செய்து வைக்க உரிமம் பெற்ற நபர்களால் நடத்தி வைக்கப்படும் திருமண சான்றிதழ்களின் உண்மை வடிப்புகள் சென்னையில் அமைந்துள்ள பதிவுத்துறை தலைவர் அலுவலகத்தில் பதிவுத்துறை தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது)–ஆல் மட்டுமே இதுவரை வழங்கப்பட்டு வந்தன. கிறித்துவ பொதுமக்கள் தங்களது மண்டல அலுவலகங்களிலேயே திருமண சான்றிதழ்களின் உண்மை வடிப்புகளை பெற்றுக் கொள்ள ஏதுவாக சம்பந்தப்பட்ட மண்டல துணை

பதிவுத்துறை தலைவர்களுக்கு இவ்வடிப்புகளை வழங்க அதிகாரம் வழங்கி 2021-22 ஆம் ஆண்டில் அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், இணையதளம் வழி விண்ணப்பித்து மின்னணு கையொப்பமிட்ட திருமண சான்றிதழ்களின் உண்மை வடிப்புகளை பதிவிறக்கம் செய்து கொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2021-2022 நிதியாண்டில் 6,665 கிறித்துவ திருமண சான்றிதழ்களின் உண்மை வடிப்புகள் பதிவுத்துறையால் வழங்கப்பட்டுள்ளன.

**11. முத்திரைத்தாள் விற்பனையாளர்கள்**

தமிழ்நாடு முத்திரை விதிகளில் வகுத்தளிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கருத்தில்

கொண்டு மாவட்டப்பதிவாளர்களால் முத்திரைத்தாள் விற்பனையாளர் உரிமம் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் 10,000 பேருக்கு ஒரு முத்திரைத்தாள் விற்பனையாளர் என்ற விகிதாச்சாரத்தில் முத்திரைத்தாள் விற்பனை உரிமங்கள் வழங்கப்படுகின்றன. போலி முத்திரைத் தாள்களின் புழக்கத்தை அகற்றிட, முத்திரைத்தாள் விற்பனையாளர்களின் கணக்குகள் கருவூலத் துறையின் கணக்குடன் மாதம் ஒரு முறை மாவட்டப்பதிவாளர்களாலும் வாரம் ஒரு முறை சார்பதிவாளர்களாலும் முறையாக ஒப்பிட்டு சரிபார்க்கப்படுகிறது.

மாநிலத்தில் மொத்தம் 4,423 உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் உள்ளனர்.

**12. ஆவண எழுத்தர்கள்**

பதிவுக்கு தாக்கல் செய்யப்படும் ஆவணங்களைத் தயாரிப்பதில் ஆவண எழுத்தர்கள் முக்கிய பங்காற்றி வருகிறார்கள். வழக்கறிஞர்களால் தயாரித்து தரப்படும் ஆவணங்களும் பதிவிற்கு ஏற்கப்படுகின்றன.

ஆவண எழுத்தர்களுக்கான உரிமங்கள் மூன்று வகையாக வழங்கப்படுகின்றன:

பதிவுத்துறை தலைவர் / சம்பந்தப்பட்ட மண்டல துணை பதிவுத்துறை தலைவரால் மாநில அளவிலான 'A' உரிமம் வழங்கப்படுகிறது, மாவட்டப் பதிவாளர்களால் மாவட்ட அளவிலான

'B' உரிமமும் உப மாவட்ட அளவிலான 'C' உரிமமும் வழங்கப்படுகிறது.

31.03.2022 அன்றுள்ளவாறு மாநிலத்தில் மொத்தமுள்ள ஆவண எழுத்தர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

| | |
|---|---|
| மாநில உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்கள் | 2,874 |
| மாவட்ட உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்கள் | 2,002 |
| சார்பதிவக உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்கள் | 312 |
| **மொத்தம்** | **5,188** |

துறையின் இணையதளமான https://tnreginet.gov.in–ல் ஏற்படுத்தப்பட்டுள்ள வசதியைப் பயன்படுத்தி பொதுமக்கள் தாங்களாகவே தங்களுக்குரிய ஆவணத்தை

உருவாக்கி பயன்படுத்தலாம். சொத்தினை வாங்குபவர், விற்பவர் மற்றும் சொத்து விவரத்தை இப்பக்கத்தில் உள்ளீடு செய்வதன் மூலம் தேவையான ஆவணம் இணைய பக்கத்தால் தானாகவே தயாரித்துக் கொடுக்கப்படும். பொதுமக்கள் தாங்களாகவே ஆவணங்களை தயாரித்துக் கொள்வதில் உதவுவதற்காக ஆவண மாதிரிப் படிவங்களும் பதிவுத்துறையின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

### 12.1 ஆவண எழுத்தர் நல நிதியம்

ஆவண எழுத்தர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நலனுக்காக ஆவண எழுத்தர் நல நிதியம் 2021-22 ஆம் ஆண்டில்

முழுமையான செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. பிற நல வாரியங்களில் அளிக்கப்படும் நலத்திட்டங்களுக்கு நிகரான நலத்திட்டங்கள் ஆவண எழுத்தர்களுக்கு இந்த நிதியம் மூலம் செயல்படுத்தப்பட உள்ளன. இந்த நிதியத்தில் உறுப்பினராக சேர விரும்பும் ஆவண எழுத்தர் ஒருமுறை சந்தாவாக ரூ.1000/- செலுத்த வேண்டும். மேலும் பதிவு செய்யப்படும் ஒவ்வொரு ஆவணத்திற்கும் ரூ.10/- ஆவணதாரர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு, ஆவண எழுத்தர் நல நிதியத்தில் சேர்க்கப்படும். இந்நிதியம் தொடர்பான விதிகள் வெளியிடப்பட்டதும், உறுப்பினர்களாகப் பதிவு செய்து கொண்டுள்ள

ஆவண எழுத்தர்களுக்கான நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

**13. துறையில் தகவல் தொழில் நுட்பத்தின் வளர்ச்சி**

மாறிவரும் உலகளாவிய சூழ்நிலைக்கு ஏற்ப பதிவுத்துறை உருவாக்கம் கொண்டு அதன் தொடர்ச்சியாக 2000 ஆம் ஆண்டில் கணினிமயமாக்கல் அறிமுகப்படுத்தப்பட்டது. எளிமையான மற்றும் வெளிப்படையான செயல்பாடுகள் மூலம் விரைவான சேவையை அளிப்பதே துறையின் இந்த கணினிமயமாக்கல் கொள்கையின் நோக்கமாகும். நவீன தொழில் நுட்பங்களைப் பின்பற்றி இலக்கமயமாக்கல், கணினிமயமாக்கல், இணையதள செயல்பாடுகள் மற்றும் இணைய அடிப்படையிலான

சேவைகளை அறிமுகப்படுத்தியதன் மூலம் இந்த நோக்கம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தகவல் தொழில் நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டதன் காரணமாக பின்வரும் சேவைகள் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன.

### 13.1 எளிமை மற்றும் வெளிப்படையான பதிவு நிர்வாகத்திற்கான 'ஸ்டார்' மென்பொருள் – (Simplified and Transparent Administration of Registration – 'STAR')

'ஸ்டார்' என்பது பதிவுத்துறைக்கென தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தகவல்களை அளிக்கும் https://tnreginet.gov.in என்ற இணையதளத்தைக் கொண்ட ஒருங்கிணைந்த மின்னாளுமை தொகுப்பாகும். இது பதிவுக்கு வரும்

பொதுமக்களின் பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்வதாக உள்ளது.

தமிழ்நாடு மேனாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களால் 06.02.2000 அன்று முதன்முதலாக 23 அலுவலகங்களில் 'ஸ்டார்' எனப்படும் கணினிமயமாக்கல் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. துறையில் உள்ள 579 சார்பதிவாளர் அலுவலகங்களிலும் கீழ்கண்டவாறு பல கட்டங்களாக கணினிமயமாக்கல் பணி நிறைவடைந்துள்ளது

| கட்டம் | துவக்க நாள் | சார்பதிவாளர் அலுவலகம் | மாவட்டப் பதிவாளர் அலுவலகம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| I | 6.2.2000 | 14 | 9 | 23 |
| II (a) | 01.01.2002 | 89 | 11 | 100 |
| II (b) | 13.9.2002 | 195 | 30 | 225 |

| | | | | |
|---|---|---|---|---|
| III | 22.3.2006 | 150 | – | 150 |
| IV | 6.7.2009 | 108 | – | 108 |
| V | ஜூன், 2010 முதல் ஜனவரி, 2011 வரை | 15 | – | 15 |
| புதியதாக திறக்கப்பட்ட அலுவலகங்கள் | 2011 ஆம் ஆண்டு ஜனவரி – பிப்ரவரி மாதங்களுக்கு இடையே | 4 | – | 9 |
| | 2022 ஆம் ஆண்டு | 1 | 4 | |
| மொத்தம் | | 576 + 3* | 54 | 630 + 3* |

* முகாம் அலுவலகங்கள்

## 13.2. ஸ்டார் 2.0–ன் வளர்ச்சி

ஸ்டார் 2.0 எனும் திட்டம் இரண்டு கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டது. அவை கட்டம்–1 (ஆவணப்பதிவு சம்பந்தப்பட்டவை) மற்றும் கட்டம்–2 (சீட்டு, சங்கங்கள், கூட்டு

பங்காண்மை நிறுவனங்கள் மற்றும் திருமணங்கள் பதிவு சம்பந்தப்பட்டவை) ஆகியனவாகும்.

**'ஸ்டார் 2.0'-ன் சிறப்பம்சங்கள்**

- ❖ பொதுமக்கள், ஆவண எழுத்தர்கள் மற்றும் வழக்கறிஞர்களுக்கென தனியாக உள்நுழைவு வசதி.
- ❖ பொதுமக்களே இணைய பக்கம் மூலம் ஆவணம் உருவாக்கும் வசதி.
- ❖ வரிசைக்கிரமமான ஆவணப் பதிவு மற்றும் திருமண பதிவிற்கென முன்பதிவு செய்து கொள்ளும் வசதி.
- ❖ அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் முன்பதிவு வரிசை எண் ஒளிரும் வசதி.
- ❖ ஆவணம் பதிவிற்கு தாக்கல் செய்யப்பட்டது முதல் ஆவணம் திருப்பி

அளிக்கப்படும் வரை, நிலுவை ஆவணங்கள், வில்லங்கச்சான்று நிலைகள், மதிப்பு குறைவு ஆவணங்கள் மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித்துணை ஆட்சியர் (முத்திரை)–க்கு அனுப்பப்பட்ட விவரம், கள ஆய்விற்குப் பின் குறைவு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவு கட்டணம் செலுத்தப்பட வேண்டிய விவரம், ஆவணம் திருப்பித்தர தயாராக உள்ள விவரம் போன்ற ஆவணங்களின் நிலை குறித்த விவரங்களை உடனுக்குடன் தெரிவிக்கும் குறுஞ்செய்தி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. பதிவர்களுக்கு இவை தொடர்பான குறுஞ்செய்திகள் அவ்வப்போதே அனுப்பப்படுகின்றன.

❖ தவறான ஆவணப்பதிவுகளைத் தடுக்கும் வகையில் முன் ஆவணதாரருக்கு

ஆவணப்பதிவு குறித்த எச்சரிக்கையை குறுஞ்செய்தியாக அனுப்பிடும் வசதி.

❖ பெருங்குடியில் உள்ள திருவாளர்கள் ELCOT மாநில தரவு மையம், பதிவுத்துறை தலைவர் அலுவலகம், சாந்தோம்–ல் அமைந்துள்ள தரவு மையம் மற்றும் புனேவில் அமைந்துள்ள பேரிடர் மீட்பு மையம் ஆகிய மூன்று இடங்களில் தரவுகளைப் பாதுகாக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மையங்களில் தரவு சேமிப்பு காரணமாக, ஆவணத்தில் வேறுபாடு செய்யப்படுவதும் ஆவணம் சிதைக்கப்படுவதும் தடுக்கப்படுகிறது.

❖ இணையதளம் வழி வில்லங்கச் சான்றுகள் மற்றும் சான்றிட்ட நகல்கள் கோரி விண்ணப்பிக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மின்னணு கையொப்பமிட்ட மற்றும் விரைவு

குறியீடிட்ட உரிய வில்லங்க சான்றுகளும் சான்றிட்ட நகல்களும் பயனர் உள்நுழைவிற்கு அனுப்பப்படுகின்றன.

- சங்கங்களைப் பதிவு செய்ய மற்றும் உரிய கட்டணங்களை செலுத்துவதற்கான இணையதள வசதி.
- கூட்டு பங்காண்மை நிறுவனங்களைப் பதிவு செய்ய மற்றும் உரிய கட்டணங்களை செலுத்துவதற்கான இணையதள வசதி.
- பதிவு செய்த சீட்டுக்களின் நிகழ்ச்சிக்குறிப்பை இணையவழி அனுப்பிடும் வசதி.
- மக்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும் சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ளவும் குறைகளுக்கு தீர்வு காணவும் கட்டணமில்லா தொலைபேசி எண் 1800–102–5174 வசதி.

## 13.3. இணைய நெறிமுறை புகைப்படக் கருவி வசதி

தலைமை அலுவலகம் மற்றும் உரிய மண்டல அலுவலகங்களிலிருந்து தொலை கண்காணிப்பு செய்வதற்கு ஒவ்வொரு சார்பதிவாளர் அலுவலகத்திலும் 3 இணைய நெறிமுறை புகைப்படக்கருவிகள் (IP கேமரா) நிறுவப்பட்டுள்ளன. இதன் மூலம் சார்பதிவாளர் அலுவலகத்தின் செயல்பாடுகளை பதிவுத்துறை தலைவர் மற்றும் துணை பதிவுத்துறை தலைவர் அலுவலகங்களிலிருந்து கண்காணிப்பு செய்திடும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இணைய நெறிமுறை புகைப்படக்கருவிகள் (IP camera) மூலம் பதிவாகும் நிகழ்வுகள் ஒவ்வொரு ஆவண/திருமண

பதிவிற்கும் ஆவணதாரருக்கும்/திருமணம் செய்பவர்களுக்கும் DVD–ல் பதிவு செய்து தரப்படுகிறது. இதற்கென ஒவ்வொரு DVD–க்கும் கட்டணம் ரூ.100/– வசூலிக்கப்படுகிறது.

வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சரால் 2021–2022–ம் ஆண்டைய மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு அனைத்து சார்பதிவாளர் அலுவலக பதிவறையின் நடவடிக்கைகளையும் கண்காணிப்பதற்காக கூடுதலாக 2 இணைய நெறிமுறை புகைப்படக் கருவிகளை பதிவறைகளில் பொருத்துவதற்கு அரசாணை வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 13.4 இணைய வழியாக வங்கிகளில் பணம் செலுத்திடும் முறை

பதிவுத்துறைக்கான கட்டணங்களை பாதுகாப்பான முறையில் செலுத்திடும் நோக்கில் இணையவழி அல்லது அங்கீகரிக்கப்பட்ட கீழ்கண்ட வங்கிகளில் நேரடியாக செலுத்திடும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

1. இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
2. இந்தியன் வங்கி
3. ஐடிபிஐ வங்கி
4. சென்ட்ரல் பேங்க் ஆஃப் இந்தியா
5. பஞ்சாப் நேஷனல் வங்கி
6. பேங்க் ஆஃப் பரோடா
7. யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா
8. பாரத ஸ்டேட் வங்கி

பாரத ஸ்டேட் வங்கி பிற வங்கிகளின் ஒருங்கிணைப்பாளராகவும் செயல்படுகிறது. இவ்வங்கியின் மென்பொருள் பதிவுத்துறையின்

மென்பொருளுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அட்டவணைப்படுத்தப்பட்ட 58 வங்கிகள் வழியாகவும் அங்கீகரிக்கப்பட்ட பணப்பரிவர்த்தனை முறைகளான இணைய வங்கி சேவை (Net Banking), பற்று அட்டை (Debit Card), கடன் அட்டை (Credit Card) மற்றும் ஒருங்கிணைந்த கட்டணமுகப்பு (UPI Payment), நிகழ்நேரத்தில் மொத்த தொகை தீர்வு செய்தல் (RTGS), தேசிய மின்னணு நிதி பரிமாற்றம் (NEFT) ஆகியவற்றின் மூலமாகவும் துறைக்கான கட்டணங்களைச் செலுத்தும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது தவிர, ரூ.1000/– வரையிலான கட்டணத்தைச் செலுத்துவதற்காக

அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும் PoS கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

## 13.5 எவ்வித கட்டணமுமின்றி இணையதளத்தில் வில்லங்க சான்று பார்வையிடும் வசதி

சொத்து உரிமையாளர்கள் தங்கள் சொத்து குறித்த விவரங்களை எவ்விடத்திலிருந்தும் சரிபார்த்துக் கொள்ளலாம். சொத்து பதிவு பரிவர்த்தனை விவரங்களை 24x7 எங்கிருந்தும் துறையின் இணையதளத்திற்குச் சென்று கட்டணமின்றி பார்வையிடலாம்.

1975–ஆம் ஆண்டு முதலான ஆவணங்களின் விவரங்கள் இலக்கமயமாக்கப்பட்டுள்ளதால் அக்காலத்திற்குரிய வில்லங்க சான்றுகளை கட்டணமின்றி பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இவ்வசதியைப் பயன்படுத்தி தினமும் ஏறத்தாழ 80,000 வில்லங்க சான்றுகள் பதிவிறக்கம் செய்யப்படுகின்றன.

### 13.6. 1975–ஆம் ஆண்டிற்கு முந்தைய கால அட்டவணை II விவரங்களை இலக்கமயமாக்கல்

1975–ஆம் ஆண்டிற்கு முன்பான காலகட்டத்திற்கான வில்லங்க சான்றுகள் தற்போது கை முறையான சரிபார்ப்பு மேற்கொள்ளப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன. இத்துறையில் 1865–ஆம் ஆண்டு முதலான மதிப்புமிகு ஆவணங்கள் சட்டப்படி பாதுகாக்கப்பட்டு வரினும், பொதுமக்கள் 1950–ஆம் ஆண்டு முதல் 1974–ஆம் ஆண்டு வரையிலான வில்லங்க சான்றுகளுக்காகவே

பெரும்பாலும் விண்ணப்பிக்கின்றனர். எனவே 1.1.1950 முதல் 31.12.1974 வரையிலான காலகட்டத்திற்கான அட்டவணை II பதிவுகளை ரூ.24.57 கோடி செலவில் இலக்கமயமாக்குவதற்கு 2021–22–ஆம் ஆண்டில் அரசால் உத்திரவிடப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு நடவடிக்கையிலுள்ளது.

**13.7 மின்னணு பதிப்புமுறை (e–Stamping)**

முத்திரைத் தீர்வையை செலுத்தும் மாற்று வழியாக திருவாளர்கள் SHCIL (Stock Holding Corporation of India Limited) மூலம் மின்னணு பதிப்பு முறை (e–Stamping) வசதி ஒன்றிய அரசின் வழிகாட்டுதலின்படி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக, சென்னையில் உள்ள 9 சார்பதிவாளர் அலுவலகங்களில் இந்த மின்னணு பதிப்பு முறையானது 27.5.2010 அன்று நடைமுறைப்படுத்தப்பட்டது.

**மின்னணு பதிப்பு முறையின் சிறப்பம்சங்கள்**

- இது மின்னணு முறை மூலம் தோற்றுவிக்கப்படும் மின்முத்திரைத்தாளாகும்.
- இதில் கணினி மூலம் அளிக்கப்படும் ஒரு பிரத்தியேக எண் (unique number) இருக்கும்.
- இதனை விற்பனை, அடமானம் போன்ற எந்தவொரு ஆவணத்திற்கும் முத்திரைத்தாளினைப் போலவே பயன்படுத்தலாம்.

- ஒரேயொரு முத்திரைச்சான்றை எந்த மதிப்பிற்கும் மின்னணு பதிப்பு முறையாக பயன்படுத்தலாம்.

பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் இதர பல அரசுடைமையாக்கப்பட்ட மற்றும் தனியார் வங்கிகள் திருவாளர்கள் SHCIL–ஆல் அங்கீகரிக்கப்பட்ட சேகரிப்பு மையங்களாக (Authorized Collection Centre–ACC) செயல்படுகின்றன. சென்னை உயர்நீதிமன்ற வளாகத்திலும் அதன் மதுரை கிளையிலும் நீதி சார்ந்த மின்னணு முத்திரைத்தாட்கள் திருவாளர்கள் SHCIL நிறுவனம் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

## மின்னணு முத்திரைத்தாள் விற்பனை விபரம்:

| வருடம் | மின்னணு முத்திரைத்தாள் | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 2010–11 | 1,206 | 24.11 |
| 2011–12 | 6,478 | 113.74 |
| 2012–13 | 11,924 | 180.90 |
| 2013–14 | 32,121 | 253.90 |
| 2014–15 | 67,062 | 236.94 |
| 2015–16 | 82,384 | 347.78 |
| 2016–17 | 1,00,587 | 246.02 |
| 2017–18 | 1,32,757 | 220.46 |
| 2018–19 | 94,478 | 245.70 |
| 2019–20 | 1,17,156 | 262.74 |
| 2020–21 | 2,75,350 | 199.78 |
| 2021–22 | 18,50,382 | 244.37 |

**13.8 வலை நிழலி (Web–Cam) மற்றும் மின்னணு ரேகை பதிவு (Bio metric device) முறை செயல்படுத்துதல்**

வலை நிழலி (Web–Cam) மூலம் புகைப்படமும் மின்னணு ரேகைக்கருவி மூலம் ரேகையும் சார்பதிவாளர் அலுவலகத்திலேயே எடுக்கும் திட்டம் 29.7.2010 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஆவணத்தை எழுதிக் கொடுப்பவரின் அடையாளத்தினை உறுதிப்படுத்த தேவையேற்படும் இனங்களில் சம்பந்தப்பட்ட சொத்தினை அவர் வாங்கும்போது விரல்ரேகைக் கருவி மூலம் அவரது விரல்ரேகை ஏற்கனவே எடுக்கப்பட்டிருந்தால் மேற்படி சொத்தினை அவர் தற்போது விற்கும்போது முன்பு எடுத்த

ரேகையுடன் தற்போது எடுக்கப்படும் விரல்ரேகை ஒப்பிட்டு சரிபார்க்கப்படுகிறது. இது பதிவு நடைமுறையில் போலி ஆவணப்பதிவு நடவடிக்கைகள், ஆள் மாறாட்டம் மற்றும் மனித தவறுகளை தடுக்க உதவுகிறது.

**13.9 மின்னணு கையொப்பம் (e–sign)**

துறை அலுவலர்களுக்கு ஆதார் அடிப்படையிலான மின்னணு கையொப்பம் தமிழ்நாடு மின்னாளுமை முகமையிடமிருந்து (TNeGA) பெறப்படுகிறது. இதற்கான தொடர் செலவினத் தொகையாக ஒவ்வொரு ஆண்டும் ரூ.28.70 இலட்சம் அரசால் ஒப்பளிப்பு செய்யப்படுகிறது. ஆதார் தரவுகளுடன் இணைக்கப்பட்ட இம்மின்னணு

கையொப்பமானது வில்லங்கச் சான்று, சான்றிட்ட நகல், சங்கங்களின் பதிவுச் சான்று, கூட்டு பங்காண்மை நிறுவனங்களின் பதிவுச்சான்று ஆகியவற்றில் பதிக்கப்பட்டு இணையதளம் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன.

**13.10 ஆதார் தரவுடன் ஆவணத்தை எழுதிக் கொடுப்பவர் மற்றும் எழுதி வாங்குபவரது விரல்ரேகை/கருவிழிப் படலம் சரிபார்த்தல்**

ஆவணப் பதிவின்போது ஆவணத்தை எழுதிக் கொடுப்பவர்/எழுதி வாங்குபவரது விரல்ரேகை எடுக்கப்படுகிறது. இந்த விரல்ரேகையை நிகழ்நேரத்தில் ஆதார் தரவுடன் ஒப்பிட்டு சரிபார்ப்பதால் ஆள்மாறாட்ட பதிவு தவிர்க்கப்படுகிறது. அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் ஆதார் தரவுடன் கருவிழிப்

படலத்தின் பதிவை ஒப்பிட்டு சரிபார்க்கும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**13.11. தன்னிச்சையான பட்டா மாறுதல்**

பதிவுத்துறையின் 'ஸ்டார் 2.0' மென்பொருளும் வருவாய்த்துறையின் 'தமிழ்நிலம்' மென்பொருளும் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. ஆவணப்பதிவு முடிந்தவுடன் பட்டா மாற்றம் செய்யப்பட வேண்டிய ஆவணங்களைப் பொருத்து பட்டா மாற்றம் செய்வதற்கான விண்ணப்பம் வருவாய்த்துறைக்கு இணைய வழியாகவே அனுப்பப்படுகிறது. அவ்வாறு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

1) உட்பிரிவு தேவையான விண்ணப்பங்கள்
2) உட்பிரிவு தேவைப்படாத விண்ணப்பங்கள்

இவற்றில் உட்பிரிவு தேவைப்படாத விண்ணப்பங்களைப் பொருத்து கீழ்கண்ட நிபந்தனைகள் பொருந்துவதாக இருந்தால் வருவாய்த் துறையின் 'தமிழ்நிலம்' மென்பொருளில் தானாகவே பட்டா மாற்றம் செய்யப்படுகிறது.

1. விற்பவரின் பெயர் பட்டாவில் இருத்தல்
2. சொத்தானது வில்லங்கம் ஏதுமின்றி இருத்தல்
3. சொத்து அமைந்துள்ள புல எண் மற்றும் உட்பிரிவு சரியாக இருத்தல்
4. சொத்து வாங்குபவருக்கு அதே கிராமத்தில் வேறு சொத்துகள் இருப்பின் அதன் பட்டா விவரம் கொடுத்தல்

இத்திட்டமானது தற்போது கிராமப் பகுதிகளில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

நகரங்களைப் பொருத்தமட்டில் ஸ்டார் 2.0 மற்றும் தமிழ்நிலம் மென்பொருட்களை இணைக்கும் பணி விரைவில் முடிக்கப்பட்டு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

**13.12 தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான வாரியம், சென்னை பெருநகர மாநகராட்சிக்குட்பட்ட சொத்து வரி மற்றும் சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் விதிக்கப்படும் குடிநீர் வரி ஆகியவற்றில் பெயர் மாற்றம் செய்ய தானாகவே விண்ணப்பம் அனுப்பும் வசதி**

சொத்து ஆவணப் பதிவின்போது, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான வாரியத்திற்கு (TANGEDCO) செலுத்தப்படும் மின் கட்டணம், சென்னை பெருநகர மாநகராட்சிக்குட்பட்ட சொத்து வரி மற்றும் சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் விதிக்கப்படும் குடிநீர்

வரி ஆகியவற்றில் பெயர் மாற்றம் செய்வதற்காக விருப்பத்தின் பேரில் தானாகவே இணைய வழியாக விண்ணப்பம் அனுப்பும் வசதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 07.12.2021 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

**14. உள்ளாட்சி அமைப்புகளுக்கு மிகுவரி மாற்றம் செய்தல்**

தமிழ்நாட்டில் நடைமுறையிலுள்ள உள்ளாட்சி சட்டங்கள் சொத்து மாற்றத்திற்கான மிகுவரியை விதிக்கவும் வசூலிக்கவும் வகை செய்கின்றன. இவ்வாறு வசூலிக்கப்படும் முத்திரைத் தீர்வை மீதான மிகுவரியில் வசூலிப்பு சேவைக் கட்டணமாக 3% மட்டும் இருத்திக் கொள்ளப்பட்டு மீதமுள்ள 97% உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றி வழங்கப்படுகிறது.

2020–21 நிதியாண்டில் ரூ.1572.33 கோடி மிகுவரியாக வசூலிக்கப்பட்டு ரூ.1525.16 கோடி நகர மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றப்பட்டுள்ளது.

**15. தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005**

தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–ன் கீழ் 2021 ஆம் ஆண்டில் 20,573 விண்ணப்பங்கள் பெறப்பட்டு உரிய தகவல்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதற்கு கட்டணமாக ரூ.2,58,128/– பெறப்பட்டுள்ளது.

**16. பொதுமக்களின் நலனுக்காக அரசால் எடுக்கப்பட்ட புதிய முயற்சிகள்**

**16.1 குறை தீர்த்தல்**

பொதுமக்கள் தங்களது புகார்களை தொலைபேசி, கட்செவி செய்தி மற்றும்

மின்னஞ்சல் வழியே தெரிவித்து, குறைகளுக்கு தீர்வு காண்பதற்காக பதிவுத்துறை தலைவர் அலுவலகத்தில் ஒரு கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. தினந்தோறும் சுமார் 150 முதல் 200 அழைப்புகள் பெறப்பட்டு பொதுமக்களின் குறைகளுக்கு தீர்வு காணப்படுகிறது.

2021-22 ஆம் ஆண்டின் சட்டமன்ற கூட்டத் தொடரின்போது வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சரால் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, வாரந்தோறும் திங்கட்கிழமை பதிவு குறை தீர்க்கும் முகாம் நடத்தும் நடைமுறை கொண்டு வரப்பட்டுள்ளது. ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை தோறும் துணை பதிவுத்துறை

தலைவர் மற்றும் மாவட்டப்பதிவாளர் அலுவலங்களில் பொதுமக்களிடமிருந்து நேரடியாக புகார் மனுக்கள் பெறப்படுகின்றன. இம்மனுக்கள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு தொடர்புடைய அலுவலர்களால் உடனடியாக தீர்வு அளிக்கப்படுகிறது.

## 16.2 பதிவுத் தவறுகளை ஆராய சிறப்பு புலனாய்வுக் குழு

பதிவுத்துறையில் கடந்த காலங்களில் நடைபெற்றுள்ள பதிவுத்தவறுகள் குறித்து முழுமையான ஆய்வு மேற்கொண்டு போலியாக பதிவு செய்யப்பட்ட மற்றும் வருவாய் இழப்பு ஏற்பட்ட இனங்களைக் கண்டறிந்து அரசுக்கு அறிக்கை அளிப்பதற்காக சிறப்பு புலனாய்வுக் குழு ஒன்று அமைக்க அரசால்

ஆணையிடப்பட்டுள்ளது. இக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் பதிவுத்தவறுகள் சரிசெய்யப்பட்டு தவறு செய்தவர்கள் மீது சட்டபூர்வ மற்றும் குற்றவியல் நடவடிக்கை தொடரப்படும். இதன் மூலம் உண்மையான நில உரிமையாளர்களின் நலன் பாதுகாக்கப்படும். இதற்காக 2021–22 ஆம் நிதியாண்டில் தொடரா செலவினமாக ரூ.80.00 இலட்சமும், தொடர் செலவினமாக ரூ.2.20 கோடியும் ஒதுக்கீடு செய்து உத்திரவிடப்பட்டுள்ளது.

**16.3 மோசடியான பதிவுகளை இரத்து செய்தல்**

மோசடி, ஆள்மாறாட்டம் போன்ற தவறுகளின் அடிப்படையில் பதிவு செய்ததாகக் கண்டறியப்படும் ஆவணத்தை இரத்து செய்ய

பதிவு செய்யும் அலுவலருக்கோ அல்லது வேறு எந்த அலுவலருக்கோ பதிவுச் சட்டம், 1908–ல் அதிகாரம் வழங்கப்படவில்லை. இதனால் பொதுமக்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. எனவே, பதிவு செய்த பொதுமக்களின் இடர்பாடுகளைக் களையும் வகையில், பதிவுச் சட்டம், 1908–ல் நமது மாநிலத்திற்கு பொருந்தும் வகையில் சட்ட திருத்தம் செய்ய அரசு முடிவு செய்து மோசடி, ஆள்மாறாட்டம் மூலம் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை இரத்து செய்ய மாவட்டப்பதிவாளர்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில், சட்டப் பேரவையில் மசோதா நிறைவேற்றப்பட்டது. இந்த மசோதாவிற்கு

குடியரசு தலைவரின் ஒப்புதல் பெறும் பொருட்டு ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**16.4 கிறித்துவ திருமண சான்றின் உண்மை வடிப்புகள்**

கிறித்துவ பொதுமக்கள் திருமண சான்றுகளின் உண்மை வடிப்புகளை இணையதளம் மூலமும் சம்பந்தப்பட்ட எல்லைக்குட்பட்ட துணை பதிவுத்துறை தலைவர் அலுவலகங்களிலும் பெற்றுக் கொள்வதற்காக 2021-22 ஆம் ஆண்டில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**16.5 சார்பதிவக செயல் எல்லைகள் மறுசீரமைத்தல்**

சில குக்கிராமங்களின் புல எண்கள் அதன் முதன்மை கிராமத்தில் அல்லாமல் வெவ்வேறு சார்பதிவாளர் அலுவலக செயல் எல்லைகளில்

அமையப் பெற்றுள்ளன. இதனால் பொதுமக்கள் பதிவு மேற்கொள்ள அந்தந்த சார்பதிவாளர் அலுவலகத்திற்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது. மக்கள் எதிர்கொள்ளும் இத்தகைய இன்னல்களைக் களைய அனைத்து குக்கிராமங்களையும் முதன்மை கிராமங்களுடன் இணைத்து ஒரே வருவாய் வட்டத்திற்குட்பட்ட அனைத்து கிராமங்களும் ஒரு துணை பதிவு மாவட்டத்தில் அமையும் வகையில் சீரமைக்க அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. நடைபெற்றுவரும் இப்பணி ஆவணப் பதிவையும் பட்டா போன்ற வருவாய் பதிவேடுகளில் பெயர் மாற்றுவதையும் எளிமைப்படுத்தும்.

### 16.6 புதிய பதிவு மாவட்டங்கள் உருவாக்குதல்


பதிவு மாவட்டங்களின் செயல் எல்லைகள் வருவாய் மாவட்டங்களின் செயல் எல்லைகளுக்கு நிகராக சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2021–2022–ம் ஆண்டில் வருவாய் மாவட்டங்களின் எல்லைக்கு நிகராக திருவள்ளூர், திருவாரூர், பெரம்பலூர், இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் ஆகிய புதிய பதிவு மாவட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதற்கென 2021–22 ஆம் ஆண்டில் ரூ.95.22 இலட்சம் தொடரா செலவினமாகவும் ரூ.320.86 இலட்சம் தொடர் செலவினமாகவும் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

## 17. முடிவுரை

ஆவணப் பதிவிற்கு வரும் பொதுமக்களுக்கு மனநிறைவான சேவையை அளிப்பதே பதிவுத்துறையின் நோக்கமாகும். கடந்த 2021–22–ஆம் நிதியாண்டில் துறை எடுத்த குறித்த காலத்திலான துரிதமான நடவடிக்கைகளும் பல்வேறு சீர்திருத்த செயல்பாடுகளும் பொதுமக்களிடையே மிகுந்த பாராட்டுகளைப் பெற்றுள்ளன. பதிவுத்துறை மீதான பொதுமக்களின் நம்பிக்கை அதிகரித்ததாலும் பதிவுக்கு வருபவர்களிடம் காட்டப்படும் மாறுபட்ட அணுகுமுறையாலும் நிகழ்ந்த நேர்மறை விளைவுகளின் காரணமாக 2021–22 ஆம் ஆண்டில் பதிவுத்துறை இதுவரையில்லாத அளவில் அபரிமிதமான வருவாய் வளர்ச்சியை எட்டியுள்ளது. கடந்த

10 ஆண்டுகளில் ஈட்டப்பட்ட ஆண்டு வருவாயினை 2021-22 ஆண்டு வருவாய் மிஞ்சியுள்ளது. பொதுமக்களுக்கு இனிய சேவையை வழங்கவும் மாநில அரசுக்கு வர வேண்டிய வருவாயை முழுமையாக ஈட்டித் தரவும் துறையால் எடுக்கப்பட்ட தளராத முயற்சிகளின் வெற்றிக்கு இதுவே சான்றாகும். பொதுமக்களின் பெருகி வரும் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் துறையால் வழங்கப்படும் சேவையின் தரத்தினை மேலும் மேம்படுத்தும் பணியில் பதிவுத்துறை தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

**பி.மூர்த்தி**
**வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்**




பல்வேறு சட்டங்களின் கீழ் 2021 – 2022 ஆம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட வருவாய் விவரம்




2016–2017 முதல் 2021–2022 வரை வருவாய் விவரம்




| | 2016–17 | 2017–18 | 2018–19 | 2019–20 | 2020–21 | 2021–22 |
|---|---|---|---|---|---|---|
| வருவாய் (ரூ.கோடியில்) | 7007.74 | 9121.53 | 11071.0 | 11028.2 | 10643.0 | 13913.6 |

2016–2017 முதல் 2021–2022 வரை வருவாய் விவரம்




| | 2016-17 | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|---|
| ஆவணங்கள் | 2027916 | 2210595 | 2573478 | 2587816 | 2695650 | 2998048 |

2016–2017 முதல் 2021–2022 வரை ஆவணப்பதிவு விவரம்




2016–2017 முதல் 2021–2022 வரை ஆவணப்பதிவு விவரம்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில், 07.12.2021 அன்று ரூ.14.27 கோடி செலவில் புதிதாக கட்டப்பட்ட ஒருங்கிணைந்த மாவட்டப்பதிவாளர் அலுவலகக் கட்டடம் மற்றும் 11 சார்பதிவாளர் அலுவலக கட்டடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்ததுடன், பதிவுத்துறையின் மென்பொருளோடு, பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் ஆகியவற்றின் மென்பொருள்களுடன் இணைக்கும் திட்டத்தையும் துவக்கி வைத்தார்.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் பதிவுத்துறை சீராய்வு கூட்டம் 29.11.2021 அன்று பதிவுத்துறை தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் மதுரை மண்டல மறுசீரமைப்பு தொடர்பான பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் 24.12.2021 அன்று மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்கள் 04.04.2022 அன்று சந்தித்து, 2021–2022 ஆண்டில் பதிவுத்துறையில் ரூ.13,913.65 கோடி வருவாய் அடைந்ததற்காக வாழ்த்து பெற்றார்.



வணிகவரி மற்றும் பத்திரப்பதிவு துறையில் அதிகபட்சமாக ₹13,406 கோடி வருவாய்

சார் — பதிவாளர் அலுவலகங்கள் எல்லை சீரமைப்பு பணி துவக்கம்

வணிகவரி, பதிவுத் துறைகளில் கூடுதல் வருவாய்: முதல்வர் பாராட்டு

ஆவண எழுத்தர்கள் நலனுக்கான நலநிதியம்

சட்டசபையில் மசோதா நிறைவேற்றம்

போலி பத்திரம் தயாரித்தால் சட்ட நடவடிக்கை

ரூ.13,406 கோடி வருவாய் பதிவுத்துறையில் சாதனை

பதிவுத்துறை தொடர்புடைய செய்தி நறுக்குகள்



புதிய விருத்தாசலம் பதிவு மாவட்ட ஒருங்கிணைந்த
பதிவுத்துறை  அலுவலக வளாக கட்டிடம்



புதிய சார்பதிவாளர் அலுவலக கட்டிடம்,
விக்கிரமசிங்கபுரம், திருநெல்வேலி மண்டலம்

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.